# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 02 ஆம் திகதிய
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2017. 11. 07 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)

## நம்பிக்கைப் பொறுப்புக்கள் (திருத்தம்)

**(87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

*நீதி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 18.00 — தபாற் செலவு : ரூபா 10.00

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## சட்டப்பயன்பற்றிய கூற்று

**வாசகம் 2** : இவ்வாசகம், "பயனுகரி" மற்றும் "விதித்துரைக்கப்பட்டது" என்னும் சொல்லமைப்புக்களின் வரைவிலக்கணங்களைச் சேர்ப்பதன்மூலம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டத்தின் 3ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

**வாசகம் 3** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 6அ மற்றும் 6ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துகின்றதென்பதுடன்-

(அ) 6அ என்னும் புதிய பிரிவின் சட்டப்பயனானது, பதிவாளர் தலைமையதிபதி நம்பிக்கைப் பொறுப்புக்களின் இடாப்பொன்றைப் பேணிவருவதற்கும் மற்றும் நம்பிக்கைப் பொறுப்புக்கள் தொடர்பிலான தகவல்களை நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் பதிவாளர் தலைமையதிபதிக்கு வழங்குவதைத் தேவைப்படுத்துவதற்குமான ஏற்பாடுகளை ஆக்குவதற்கானதாகும்; அத்துடன்

(ஆ) 6ஆ என்னும் புதிய பிரிவின் சட்டப்பயனானது, இயைபான அதிகாரசபைகளுக்கு நம்பிக்கைப் பொறுப்புக்கள் பற்றிய தகவல்களை வழங்குவதற்கு பதிவாளர் தலைமையதிபதியை இயலச் செய்வதற்கான ஏற்பாடுகளை ஆக்குவதற்கானதாகும்.

**வாசகம் 4** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 19அ, 19ஆ மற்றும் 19இ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துகின்றதென்பதுடன்-

(அ) 19அ என்னும் புதிய பிரிவின் சட்டப்பயனானது, நம்பிக்கைப் பொறுப்புக்களுடன் சம்பந்தப் பட்ட ஆட்களின் அடையாளம் பற்றிய நாளது வரையாக்கப்பட்ட தகவல்களை நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் பதிவேட்டில் வைத்திருப்பதைத் தேவைப்படுத்துவதற்கானதாகும்;

(ஆ) 19ஆ என்னும் புதிய பிரிவின் சட்டப்பயனானது, நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் இயைபான அதிகாரசபைகளுக்கு தகவல்களை வழங்குவதைத் தேவைப்படுத்துவதற்கானதாகும்; அத்து டன்

(இ) 19இ என்னும் புதிய பிரிவின் சட்டப்பயனானது, முதன்மைச் சட்டவாக்கத்தின் 6அ, 19, 19அ மற்றும் 19ஆ ஆகிய பிரிவுகளின்கீழ் புரியப்படும் தவறுகளுக்கான தண்டனைகளை விதிப் பதற்கானதாகும்.

**வாசகம் 5** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 72 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், முதன்மைச் சட்டவாக்கத்தில் 19இ என்னும் பிரிவை உட்புகுத்துவதன்மூலம் செய்யப்பட்ட திருத்தத்திற்கு விளைவாந் தன்மையினதானதுமாகும்.

**வாசகம் 6** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 75 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், முதன்மைச் சட்டவாக்கத்தில் 19இ என்னும் பிரிவை உட்புகுத்துவதன்மூலம் செய்யப்பட்ட திருத்தத்திற்கு விளைவாந் தன்மையினதானதுமாகும்.

**வாசகம் 7** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 115அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றதென்பதுடன், புதிய பிரிவின் சட்டப்பயனானது, அமைச்சர் முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழ் ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கானதுமாகும்.

ச.வ. - ஒ. 24/2016

## (87ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2017ஆம் ஆண்டின்      ஆம் இலக்க, நம்பிக்கைப் பொறுப்புக்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*87 ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (87ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டத்தின் 3ஆம் பிரிவானது, அப்பிரிவின் (உ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் பந்திகளை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(உ) "பயனுகரி" என்பது, எந்த ஆளின் அல்லது வரையறுத்துக் கூறப்பட்ட அல்லது திட்டவட்டமாக ஆய்ந்தறியக் கூடிய ஆட்களின் வகுப்பின் நன்மைக்காக நம்பிக்கை ஏற்றுக் கொள்ளப்படுகின்றதோ, அந்த ஆள் அல்லது ஆட்களின் வகுப்பு எனப் பொருள்படும்;

(உஉ) "விதித்துரைக்கப்பட்டது" என்பது, இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்டது எனப் பொருள்படும்;".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 6அ மற்றும் 6ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.*

**3.** பின்வரும் புதிய பிரிவுகள், முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆம்பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அவை அம்முதன்மைச் சட்டவாக்கத்தின் 6அ மற்றும் 6ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*"பதிவாளர் தலைமையதிபதி நம்பிக்கைப் பொறுப்புக்களின் இடாப்பைப் பேணிவருதல்.*

6அ. (1) பதிவாளர் தலைமையதிபதியானவர், 5 ஆம் பிரிவுக்கு இணங்கியொழுகி உருவாக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பு ஒவ்வொன்றும் பற்றி விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தகவல்களை உள்ளடக்கிய இடாப்பொன்றைத் தயாரித்துப் பேணிவருதல் வேண்டும்.

2-PL 010391-475 (2017/10)

(2) ஏதேனும் அசையா ஆதனத்தின் அல்லது அசையும் ஆதனத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர், (1) ஆம் பிரிவின் நோக்கத்துக்கென, விதித்துரைக் கப்படக் கூடியவாறான நம்பிக்கைப் பொறுப்பு தொடர்பிலான அத்தகைய எல்லாத் தகவல்களையும் பதிவாளர் தலைமையதிபதிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

நம்பிக்கைப் பொறுப்புக்கள் பற்றிய தகவல்களை வழங்கு வதற்கான பதிவாளர் தலைமை அதிபதியின் கடமை.

6ஆ. (1) பதிவாளர் தலைமையதிபதியானவர், நிதிசார் உளவறிதற் கூறினால் அல்லது நிதிசார் உளவறிதற் கூறின் எழுத்திலான வலுவளிப்புடன் வேறு ஏதேனும் அதிகாரசபையினால் செய்யப்பட்ட வேண்டுகோள் ஒன்றின் மேல், 6அ என்னும் பிரிவின்கீழ் பேணப்படும் இடாப்பில் வைக்கப் பட்டுள்ள ஏதேனும் நம்பிக்கைப் பொறுப்புடன் தொடர்பான எவையேனும் தகவல்களை நிதிசார் உளவறிதற் கூறுக்கு அல்லது அத்தகைய வேறு அதிகாரசபைக்கு வழங்குதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக, நிதிசார் உளவறிதற் கூறு என்பது, 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின்கீழ் பெயர் குறிக்கப்படக் கூடிய நிதிசார் உளவறிதற் கூறாக இருத்தல் வேண் டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 19அ, 19ஆ, 19இ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் 19அ, 19ஆ அத்துடன் 19இ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

“அடையாளம் பற்றிய நாளது வரையாக்கப் பட்ட தகவல்களை

19அ. (1) நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவர், 6ஆம் பிரிவின்கீழ் நம்பிக்கைப் பொறுப்பு உருவாக் கப்படும் நேரத்தில் பின்வரும் ஆட்களின் அடை யாளம் பற்றி விதித்துரைக்கப்படக்கூடியவாறான,

*நம்பிக்கைப் பொறுப்பாளர் பதிவேட்டில் வைத்திருத்தல்.*

அத்தகைய எல்லாத் தகவல்களினதும் பதிவேடுகளை வைத்திருத்தல் வேண்டும்:-

(அ) நம்பிக்கைப் பொறுப்பாளர்;

(ஆ) கூட்டுநம்பிக்கைப் பொறுப்பாளர்கள், எவரேனும் இருப்பின்;

(இ) நம்பிக்கைப்பொறுப்பு ஆக்குநர்;

(ஈ) பயனுகரி, அதிகூடியசாத்தியமான அளவிற்கு; அத்துடன்

(உ) ஒரு முகவர், சட்டப் பிரதிநிதி, முகாமையாளர், முதலீட்டு மதியுரைஞர் அல்லது வரி மதியுரைஞர், கணக்காளர் அல்லது வேறு வகையிலான தகைமையில் நம்பிக்கைப் பொறுப்பு நிறைவேற்றத்தில் ஈடுபடும் வேறெவரேனும் ஆள்.

(2) ஒராம் உட்பிரிவின் கீழான தகவல்கள் சாத்தியமான இயன்றளவிற்கு ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் சரிபார்க்கப்பட்டு நாளது வரையாக்கப்படுதல் வேண்டும்.

(3) நம்பிக்கைப்பொறுப்பொன்று, ஆட்களின் வகுப்பொன்றின் நன்மைக்காக உருவாக்கப்பட்டிருக்கின்றவிடத்து, அதிகூடியசாத்தியமான அளவிற்கு அத்தகைய ஆட்களின் வகுப்பைச் சேர்ந்த ஒவ்வோராளினதும் அடையாளம் பற்றி விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாத் தகவல்களும் (1) என்னும் உட்பிரிவின் கீழான பதிவேட்டில் வைக்கப்படுதல் வேண்டும்.

(4) ஒரு நம்பிக்கைப் பொறுப்பானது, இயற்கை ஆளொருவர் தவிர்ந்த ஆளொருவரின் நன்மைக்காக உருவாக்கப்பட்டிருக்கின்றவிடத்து, அந்நம்பிக்கைப் பொறுப்பினுடைய பயனுறு சொந்தக்காரராகவுள்ள இயற்கை ஆளின் அடையாளம் பற்றிய தகவல்கள் (1) என்னும் உட்பிரிவின் கீழானபதிவேட்டில் வைக்கப் படுதல் வேண்டும்.

(5) நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவர், நம்பிக்கைப் பொறுப்புடன் அத்தகைய ஆளின் ஈடுபாடு காணப்படுவதிலிருந்து இல்லாதொழிகின்ற தேதியிலிருந்து ஆகக்குறைந்தது ஆறு ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதியொன்றுக்கு (1), (2), (3) மற்றும் (4) என்னும் உட்பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்படும் எவரேனும் ஆளின் தகவல்கள் பற்றிய பதிவேடு களைப் பேணுதல் வேண்டும்.

(6) இப்பிரிவின் நோக்கங்களுக்கென, “பயனுறு சொந்தக்காரர்” என்பது, அந்த நம்பிக்கைப் பொறுப்பின் நன்மைகளின் இறுதி சொந்தமாகக் கொண்டுள்ள அல்லது நம்பிக்கைப் பொறுப் பாதனத்தை கட்டுப்படுத்துகின்ற இயற்கை ஆளொருவர் அல்லது ஆட்கள் அல்லது நம்பிக்கை பொறுப்பொன்று எந்த ஆள் அல்லது ஆட்கள் சார்பாக உருவாக்கப்படுகின்றதோ அந்த ஆள் அல்லது ஆட்கள் எனப்பொருள்படும் என்பதுடன் கூட்டிணைக்கப்பட்டிருப்பினும்சரி அல்லது கூட்டிணைக்கப்படாதிருப்பினும்சரி, ஆள் அல்லது ஆட்கள் குழாமொன்றின் மீது இறுதி பயனுறு கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கின்ற ஆள் அல்லது ஆட்களையும் உள்ளடக்குகின்றது.

*நம்பிக்கைப் பொறுப்பாளர் இயைபான அதிகார சபைகளுக்கு அடையாளம் மீதான நாளது வரையாக்கப்பட்ட தகவல்களை வழங்குதல்.*

*19ஆ. (1)(அ)* நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவர் அத்துடன் கூட்டுநம்பிக்கைப் பொறுப்பாளர் எவரேனுமிருப்பின், அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பாளர் அத்தகைய அதிகார சபையினால் அத்தகைய தகவலை வழங்குமாறு தேவைப்படுத்தப்படும் போதிலெல்லாம் 19அ என்னும் பிரிவில் குறிப்பிடப்பட்ட எவரேனும் ஆள் தொடர்பில், அப்பிரிவின் கீழ் பேணப்படுகின்ற பதிவேட்டிலுள்ள எவையேனும் தகவல்களை ஏதேனும் இயைபான அதிகாரசபைக்கு வழங்குதல் வேண்டும்.

(ஆ) பந்தி (அ) வின் நோக்கத்திற்காக, "இயைபானஅதிகாரசபை" என்பது–

(i) பணம் தூய்தாக்கலைத் தடுத்தல் அத்துடன் பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் பொறுப்பு குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் பகிரங்க அதிகாரசபை; அல்லது

(ii) பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பு என்பவற்றுடன் இணைந்த தவறுகளைப் புலனாய்வு செய்தல் மற்றும் குற்றவழக்குத் தொடர்தல் மற்றும் அத்தகைய தவறுகளுடன் தொடர்பான சொத்துக்களைக் கைப்பற்றுதல் அல்லது முடக்குதல் அத்துடன் பறிமுதல் செய்தல் பணியை ஆற்றுகின்ற ஏதேனும் அதிகார சபை,

எனப் பொருள்படும்.

(2) (அ) நம்பிக்கைப் பொறுப்பாளரொருவர், நிதித்தொழிலை அல்லது குறித்தொதுக்கப்பட்ட நிதிசாரா தொழிலை கொண்டுநடாத்துகின்ற ஏதேனும் நிறுவனத்துடன், விதித்துரைக்கப்படக்

கூடியவாறான நிதி வரையறையொன்றை விஞ்சு கின்ற, தொடர்ந்து கொண்டிருக்கின்ற தொழில்சார் உறவொன்றினுள் இணையும்போது அல்லது ஏதேனும் கொடுக்கல் வாங்கலை நடாத்துகின்ற போது அல்லது ஏதேனும் அவ்வப்போதான கொடுக்கல் வாங்கலைக் கொண்டு நடாத்துகின்ற போது, அத்தகைய நிறுவனத்தால் தேவைப்படுத்தப் படுகின்றவாறான 19அ என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் எவரேனும் ஆளின் அடையாளம் மீதான அல்லது தொழில்சார் உறவுக்கு அமைந்த தாயிருக்கின்ற நம்பிக்கைப் பொறுப்பு ஆதனம் மீதான நாளது வரையாக்கப்பட்ட தகவல்களை வழங்குதல் வேண்டும்.

(ஆ) பந்தி (அ) வின் நோக்கத்திற்காக, "குறித் தொதுக்கப்பட்ட நிதிசாரா தொழில்", "நிதித் தொழில்" மற்றும் "அவ்வப்போதான கொடுக்கல் வாங்கல்" என்பன, 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்திலுள்ளவாறாக அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*6அ, 19, 19அ, 19ஆ என்னும் பிரிவுகளை மீறுவதற்கான தண்டம்.*

19இ. பிரிவுகள் 6அ, 19, 19அ மற்றும் 19ஆ என்பவற்றின் ஏற்பாடுகளை மீறிச் செயற்படுகின்ற நம்பிக்கைப் பொறுப்பாளரொருவர், இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவரால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றுக்கு அல்லது இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப் பகுதியொன்றிற்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் பொறுப்பாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 72ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 72ஆம் பிரிவு, "அவரது பதவியிலிருந்து அவர் விடுவிக்கப்படுவதன் மூலம் வறிதாகும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அவரது பதவியிலிருந்து அவர் விடுவிக்கப்படுவதன் மூலம் அல்லது அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பாளர் 19இ என்னும் பிரிவின் கீழான தவறொன்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மீது வறிதாகும்" என்னும் சொற்களையும்எண்களையும்இடுவதன்மூலம்இத்தால்திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 75ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 75ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், "அல்லது ஒவ்வாததாகவுள்ள நம்பிக்கைப் பொறுப்பொன்றை ஏற்றுக் கொள்ளுகின்ற போதெல்லாம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அல்லது ஒவ்வாததாகவுள்ள நம்பிக்கைப் பொறுப்பொன்றை ஏற்றுக்கொள்ளுகின்ற அல்லது 19இ என்னும் பிரிவின் கீழான தவறொன்றுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்படும் போதெல்லாம்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 115அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்.*

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 115 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 115அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"ஒழுங்கு விதிகள்.

115அ. (1) அமைச்சர், இச்சட்டத்தினால் விதித்துரைக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட எல்லா கருமம் தொடர்பிலும் அல்லது எவை தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டதோ அவை தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வசதியாகக் கூடியளவு விரைவாக அங்கீகாரத்திற்காகப் பாராளுமன்றத்தின் முன் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அதன் கீழ் ஏலவே ஆக்கப்பட்டதெதற்கும் பங்கமின்றி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட தேதிபற்றிய அறிவித்தலானது, வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**8**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.